**வ.மா.பொ.சே.ஆ.குழுசுற்றறிக்கை இல : 10/2018**

எனது இல : **NP/07/10/04/36**
மாகாணபொதுச் சேவைஆணைக்குழு,
வடக்குமாகாணம்,
யாழ்ப்பாணம்.
23.03.2018

செயலாளர் - முதலமைச்சரின் அமைச்சு,
பணிப்பாளர், கிராம அபிவிருத்தித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண பொதுச்சேவையின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் விசேட தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்-2018

**01.** வடக்கு மாகாண பொதுச்சேவையின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் விசேட தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2018.04.23**ஆகும்.

**02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :-**

2.1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைவான சேவை நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

2.2இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் **திறமைநிலை ஒழுங்கு முன்னுரிமை** அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

2.3 இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

2.4 மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கும் போது தங்களது விண்ணப்பப் படிவங்களை தமது திணைக்களத் தலைவரூடாக சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவரினால் சிபாரிசு செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**03. சம்பள அளவுத்திட்டம் :-**

பொது நிர்வாகசுற்றறிக்கை 06/2006 ற்கு அமைவாக. **(MN-7-2006A)** என்ற சம்பள வகுப்பின் **ரூபா.20,030 – 11 x 365 –18 x 500 ரூபா. 33,045/-**ஆகும். இச்சம்பள வகுப்பின் 06வது படிநிலையான ரூபா 21,855/= ஆரம்பச்சம்பளமாகும்.

**04. ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அடிப்படைத் தகைமைகள் :-**

**4.1 வயதெல்லை :-**

சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பின் போது உச்சவயதெல்லை ஏற்புடையதல்ல.

### 4.2 தகைமைகள் :

(அ). கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் **தரம்I** பதவியில் குறைந்தது **ஐந்து (05)** வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன் உரிய **ஐந்து (05)** சம்பள ஏற்றத்தினையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ). உரிய காலப்பகுதிக்குள், தொடர்புடைய வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### 05. பொதுவான தகைமை :-

விண்ணப்பதாரிகள் மேலே குறிப்பிட்ட பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருப்பதுடன், வடமாகாணத்தின் எந்தப்பகுதியிலும் சேவை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

### 06. ஆட்சேர்ப்புமுறை :-

6.1. வடக்குமாகாணத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம், அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள், தாபனவிதிக்கோவை, மாகாண கொள்கைகள் மற்றும் விளம்பரத்தின் **பந்தி 10** இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் விண்ணப்பதாரிகள் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

6.2. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கேற்ப திறமை அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை மூலமாக பதவியுயர்த்தப்படுவர்.

6.3. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் கோரும் முடிவு திகதியான **23.04.2018க்கு** முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். என்பதுடன் தகைமையற்றவர்களின் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

### 07. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் சமா்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவா் மாகாண அரசசேவையிலிருந்து நீக்கப்படலாம். மேலே**6.3 பந்தியில்** கூறப்பட்ட விடயங்களை விண்ணப்பதாரிகள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

### 08. விண்ணப்பிக்கும் முறை :-

8.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் மட்டும் உபயோகித்து, இல 01தொடக்கம்11 வரை முதலாம் பக்கத்திலும், இல. 12தொடக்கம் 14வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

8.2. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி

விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.3. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

8.4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018 ஏப்ரல் மாதம்23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**09.**விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேணடும்.

(அ). தேசிய அடையாளஅட்டை

(ஆ). செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)

**10.கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை :-**

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். **(மொத்தம் 100 புள்ளிகள்)**

| **இல** | **புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள்** | **உச்ச புள்ளிகள்** |
|---|---|---|
| **01. சேவைமூப்பு** | | |
| 01.1 | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்I பதவியில் ஐந்து வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்த பிற்பாடான ஒவ்வொரு வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவை நிறைவுக்காலத்திற்கும் **ஐந்து (05)** புள்ளிகள் வழங்கப்படுவதுடன், உயர்தபட்சம் 50 புள்ளிகளாகும். இவ்விடயம் தொடர்பாக ஒருவருடத்திற்கு குறைந்த ஆனால் ஆறு மாதத்திற்கும் மேற்பட்ட காலத்திற்கு **மூன்று (03)** புள்ளிகள் வழங்கப்படும். எவ்வாறாயினும் ஆறு மாதத்திற்குக் குறைந்த காலப்பகுதிக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. | 50 புள்ளிகள் |
| **02. அனுபவம்** | | |
| 02.1 | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்I இல் பதில் கடமை அடிப்படையில் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய ஒவ்வொரு வருட திருப்திகரமான சேவைக்காலத்திற்கும் **நான்கு (04)** புள்ளிகள் வழங்கப்படுவதுடன் உயர்ந்த பட்சம் 20 புள்ளிகள் வழங்கப்படும். இவ்விடயம் தொடர்பாக ஒரு வருடத்திற்கு குறைந்த ஆனால் ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு **இரண்டு (02)** புள்ளிகள் வழங்கப்படும். எவ்வாறாயினும், ஆறு மாதத்திற்கு குறைந்த காலப்பகுதிக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. | 20 புள்ளிகள் |
| **03. மேலதிக கல்வித் தகைமைகள்** | | |
| 03.1 | பட்டப்பின் பட்டப்படிப்பிற்கு (Post Graduate Degree) **எட்டு (08)** புள்ளிகள் வழங்கப்படும். | 08 புள்ளிகள் |
| 03.2 | பட்டப்பின் டிப்ளோமாவிற்கு **நான்கு (04)** புள்ளிகள் வழங்கப்படும். (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் /அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்) | 04 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| 03.3 | கிராம அபிவிருத்தி சம்மந்தப்பட்ட விடயங்களில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட டிப்புளோமாவிற்கு **இரண்டு (02)** புள்ளிகள் வழங்கப்படும். | 02 புள்ளிகள் |
| **04. ஏனைய தகைமைகள்** | | |
| 04.1 | அரசினால் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து ஆங்கில மொழிக்கு பெறப்பட்ட டிப்புளோமா/சான்றிதழ் கற்கை நெறிக்கு (குறைந்த பட்சம் 06 மாத கற்கைநெறி) **இரண்டு (02)** புள்ளிகள் வழங்கப்படும். | 02 புள்ளிகள் |
| 04.2 | தேசிய பயிற்சி அதிகாரசபை அல்லது தொழில்நுட்பக்கல்லூரி அல்லது அதற்குச் சமனான ஏதாவது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து வழங்கப்பட்ட ஆறு மாத காலத்திற்கு குறையாத கணனி கற்கை நெறியினை திருப்திகரமாக நிறைவு செய்திருந்தால் **இரண்டு (02)** புள்ளிகள் வழங்கப்படும். | 02 புள்ளிகள் |
| 04.3 | விசேட செயற்திட்டங்கள் சம்பந்தமான வேலைகளில் ஈடுபாடான அனுபவம் மற்றும் பெறப்பட்ட புகழ்/மெச்சுதல்/ஒப்புதல்களுக்கு **இரண்டு (02)** புள்ளிகள் வழங்கப்படும். | 02 புள்ளிகள் |
| **05. நேர்முகப்பரீட்சையின் போதான செயற்பாட்டுத்திறன்** | | 10 புள்ளிகள் |
| **மொத்தம்** | | **100 புள்ளிகள்** |

**11.**இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதே போன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்மந்தமாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

**12.**சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமான முடிவு நியமன அதிகாரியாலேயே தீர்மானிக்கப்படும்.

**சி.ஏ.மோகன்ராஸ்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
23.03.2018

பிரதி :-

01. பிரதம செயலாளர், வடக்கு மாகாணம். –தகவலுக்காக.